இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் *1893/2010*

குரு என்கிற குருபரன் மற்றும் பலர் ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

மாநில அரசு சார்பாக
காவல்துறை ஆய்வாளர் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

<u>தீர்ப்புரை</u>

<u>மாண்புமிகு நீதியரசர் திரு. தீபக் குப்தா:</u>

1. இந்த மேல்முறையீடு, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை எதிர்த்து *1, 2, 3, 5* மற்றும் *9*-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத் தீர்ப்புரையில் குரு என்கிற குருபரன் *(எ-1)* மற்றும் துரை என்கிற துரைராஜன் *(எ-2)* ஆகியோர் இந்திய தண்டனைச் சட்டம் *(இ.த.ச.)* பிரிவு *302*-இன் கீழான குற்றத்திற்காகத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனையும், ஒவ்வொருவருக்கும் ரூ.*1000/-* அபராதம் செலுத்தவும் தண்டிக்கப்பட்டு, அபராதம் கட்ட தவறினால், *3* மாத கடுங்காவல் தண்டனை விதித்து தண்டிக்கப்பட்டனர். வெற்றி என்கிற வெற்றிவேலைப் பொறுத்தவரையில், அவர் இ.த.ச., பிரிவு *324*-இன் கீழ் இரு குற்றச்சாட்டுக்கூறுகளின்பேரில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கூறின்பேரில் கடுங்காவல் தண்டனையும், அபராதம் ரூ.*1000/-* விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் *3* மாதங்கள் தண்டனை விதித்தும் தண்டிக்கப்பட்டார். நாராயணன் *(எ-5)* மற்றும் சீனிவாசன் *(எ-9)*, மற்ற எதிரிகளுடன் சேர்த்து, இ.த.ச., பிரிவு *323*-இன் கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, ஆறு மாதங்கள் கடுங்காவல்

தண்டனையும், ஒவ்வொருவரும் ரூ.1000/- அபராதம் செலுத்தவும், அபராதம் கட்டத்தவறினால் 3 மாத தண்டனையும் விதித்து தண்டிக்கப்பட்டனர். தண்டனைகள் அனைத்தும் ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டும்.

2. அரசுத்தரப்பு வழக்கு யாதெனில், இறந்துபோன சரோஜா மற்றும் முனுசாமி பிள்ளை (அ.சா.1) என்போரின் மகன் பரசுராமன் (அ.சா.14), எ.1-இன் தங்கை உமாவை காதலித்து வந்தார். அவர்கள் இருவரும் திருமணம் செய்துகொண்டனர், திருமணத்திற்குப்பிறகு அ.சா.14 அவரது மனைவியின் வீட்டில் வசித்துவந்தார். இருப்பினும், இதை சரோஜா (இறந்தவர்) ஏற்கவில்லை. அதன்பிறகு அ.சா.14 அவரது வீட்டிற்கு வந்தார். 3.3.1998 அன்று சரோஜாவின் சகோதரரும், அ.சா.1-இன் மைத்துனருமான நாகராஜனை (அ.சா.2), ஜெயராமன் (எ.4) தாக்கியதாகக் கூறப்படுகிறது. இப்பிரச்சினையைத் தீர்க்க மறுநாள் ஒரு பஞ்சாயத்து கூட்டப்பட்டது. இந்த பஞ்சாயத்து எ.1-இன் வேண்டுகோளின்படி கூட்டப்பட்டதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பஞ்சாயத்து மாலையில் நடத்தப்பட இருந்தது. இருப்பினும், பஞ்சாயத்து தலைவர் உடல்நலக்குறைவுடன் இருந்ததால் பஞ்சாயத்து நடத்த முடியவில்லை. அதன்பிறகு, அ.சா.2, அவரது சகோதரி சரோஜா (இறந்தவர்), அவரது மனைவி ராணி (அ.சா.7), முருகன் (அ.சா.13) மற்றும் அ.சா.2 மற்றும் அ.சா.7-இன் மகனான நவீன்குமார் ஆகியோர் அ.சா.2-இன் வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டு தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தனர். அவரது கூற்றுப்படி, அ.சா.13 பஞ்சாயத்து இருந்ததால் கிராமத்திற்கு வந்திருந்தார். அவர்கள் அங்கே நின்று கொண்டிருந்தபோது, எ.1 ஒரு அரிவாளையும் (கொடுவாள்), எ.2 இரும்புக்குழாயினையும், எ.3 ஒரு அரிவாளினையும் (கொடுவாள்) மற்றும் எ.4 முதல் எ.9 வரையிலானவர்கள் மரக்கழிகளையும் தங்கள் கைகளில் வைத்திருந்தனர்.

எ.1-இன் தங்கை, அவளது கணவனிடமிருந்து பிரிந்து தனியாக வாழ்வதற்கு சரோஜாதான் காரணம் என்று கூறி, சரோஜாவின் முன்பகுதி தலையில் அருவாள்கொண்டு தாக்கியதாக கூறப்படுகிறது. எ.2 இரும்புக் குழாயால் சரோஜாவின் பின் கழுத்துப்புறத்தில் அடித்தார். மற்ற எதிரிகள் கையில் வைத்திருந்த மரக்கழிகளால் சரோஜாவை தாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. சரோஜாவின் குடும்ப உறுப்பினர்கள் அவளைப் பாதுகாக்க முயன்றபோது, எதிரிகள் 9 பேரும் அவளைச் சூழ்ந்து கொண்டனர், ஆதலால் அவர்களால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. கண்ணுற்ற சாட்சிகளின் கூற்றுப்படி, அவர்களும் தாக்கிய தரப்பில் உள்ள ஆட்களால் தாக்கப்பட்டனர் என்பதாகும். அனைத்து கண்ணுற்ற சாட்சிகளின் கூற்றும் ஒன்றாகவே இருந்தன.

3. இருப்பினும், மேற்படி சம்பவம் நடந்தவிதம் தொடர்பாக சில முரண்பாடுகள் உள்ளன. அ.சா.1-இன் கூற்றுப்படி, பஞ்சாயத்து நடந்த தேதியில், முதலில் இரு தரப்பினருக்குமிடையே வாய்ச்சண்டை ஏற்பட்டது, அதன்பின்னர் தாக்குதல் நடந்தது, அதேவேளையில் அ.சா.2 மற்றும் வேறுசில சாட்சிகளின் கூற்றுப்படி, எந்தவொரு ஆத்திரமூட்டலும் இல்லாமல் இந்த தாக்குதல் நடந்தது என்பதாகும். இந்த மேல்முறையீட்டைத் தீர்மானிக்கும்பொருட்டு, இரு தரப்பினருக்குமிடையில் ஏதோ வாய்ச்சண்டை இருந்தது என்றுங்கூட நாம் ஊகிக்கலாம் என்பது எங்களது ஆய்ந்தறிந்த கருத்தாகும்.

4. சம்பவம் மறுக்கப்படவில்லை. முக்கிய எதிர்வாதம் என்னவென்றால், இருதரப்பிலும் கட்டற்ற சண்டை இருந்தது என்பதும், இதற்கு முன்னதாக இதுகுறித்து திட்டமிட்டுள்ளனர் என்று காட்ட சான்றேதுமில்லை என்பதுமாகும். எதிரிகளுக்கு இ.த.ச., பிரிவு 34 அல்லது பிரிவு 149-இன் தண்டனைத்

தீர்ப்பளிக்கப்பட்டிருக்காததால், ஒவ்வொரு எதிரிக்கும் கற்பித்துக் கூறப்பட்ட காயத்திற்கு மட்டுமே தண்டனைத் தீர்ப்பளிக்கப்படமுடியும். ஆகவே, பிரேத அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ராஜாமணி, உதவி அறுவை சிகிச்சை நிபுணர் (அ.சா.3)-இன் மருத்துவ சாட்சியத்தைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகிறது. காயங்கள் பின்வருமாறு:

> "1. பிரேத பரிசோதனைக்கு முன் நடுத்தலை உச்சிப்பகுதியிலிருந்து 1 செ.மீ. தள்ளி இடது முன்பகுதியில் இரத்தக் கசிவும், இரத்தம் உறைந்தும், எலும்புகள் வெளியில் தெரியும்வண்ணம் 6 செ.மீ. x 1 செ.மீ. x 1 செ.மீ அளவிலான சிவந்த, சாய்வான கிழிந்த காயமிருந்தது. காயத்தை ஆய்வுசெய்ததில் முன், பின், பக்கவாட்டு, உச்சி மண்டையின் மீது உச்சந்தலைக்குப் பின்னால் இரத்தக்கசிவினால் நிறம்மாறி காணப்பட்டது. முன்தலையில் 5 செ.மீ. அளவிலான நீளமான, செங்குத்தான, பகுதி அம்புபோன்ற எலும்புமுறிவு, இடது பக்க நடு உச்சியிலிருந்து 1 செ.மீ. தள்ளி, முன் பக்கவாட்டு இணைப்புக்கு மேல்நோக்கி நீண்டிருந்தது மற்றும் அதற்கருகே மற்றொரு மெல்லிய எலும்பு முறிவு, முன்தலை எலும்பிலிருந்து, முன் பக்கவாட்டு இணைப்பினை நோக்கி, சற்றே சாய்ந்து 4 செ.மீ. x 1/8 அளவில், முன், பின், பக்கவாட்டு மற்றும் உச்சி மண்டையில் இடது பக்க ஒரு பாதி மூளைப்பகுதியின் சவ்வின்மீது, இரத்தம் உறைந்து, மண்டையோட்டு எலும்பு வெளியில் தெரியும்படியாக இருந்தது. இரு எலும்பு முறிவுகளும், உள் மற்றும்

வெளி மண்டையோட்டின் இருதளப்பரப்பில் ஒன்றுடன் தொடர்புடையவையாகும்.

2. வலது பக்க கழுத்தின் 1/3-க்கு நடுவில் சாய்ந்தநிலையில் வெவ்வேறு அளவிலான சிராய்ப்புகள் 3 செ.மீ.-லிருந்து 2½ செ.மீ. x ¼ செ.மீ. உடன் ½ செ.மீ. என ஒன்றுக்கொன்று வெவ்வேறளவில் அமைந்திருந்தன.

3. பிரேத பரிசோதனைக்கு முன் 2½ செ.மீ. x ¼ செ.மீ. அளவிலான சிராய்ப்பு, வலது பக்க கழுத்தின் மீதிருந்த காய எண் 2-லிருந்து 1 செ.மீ. தள்ளி சாய்வாக அமைந்திருந்தது.

4. பிரேத பரிசோதனைக்கு முன், வலதுபுற கழுத்தின் முன், பின் பகுதி முழுவதும் வீக்கமாக இருந்தது. காய எண்கள் 2, 3, 4 வெளியில் தெரிந்தும், கழுத்துத் தோலின் கீழ் சிறிது இரத்தம் உறைந்தும், கழுத்துத் திருப்பு நரம்பு தசையில் இரத்தத் திரட்சியும் வலது பக்க கழுத்தின் முன், பின் பகுதியில் இரத்தம் உறைந்தும் காணப்பட்டது."

5. இக்காயங்கள் மரணத்தை விளைவித்ததாக மருத்துவர் கூறுகிறார். முதல் காயம் ஒரு கிழிந்த காயமாகும். இக்காயம் கூர்மையான ஆயுதமான அரிவாளால் (கொடுவாள்) விளைவித்திருக்கமுடியாது, அரிவாள் என்பது முக்கியமாக புல் மற்றும் பயிர்களை வெட்டுவதற்கான ஒரு கருவியாகும். அதன் உள்பக்கம் கூர்மையாகவும், வெளிப்புறம் மழுங்கியதாகவும் இருக்கும். இதை விவசாயத்திற்கான ஒரு கருவியாக மட்டும் பயன்படுத்தும்போது கூர்மையான விளிம்பு பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அதை குற்றம்புரிவதற்கான ஆயுதமாக பயன்படுத்தும்போது, பெரும்பாலும் அதன்

வெளிப்புறமே பாதிக்கப்பட்டவரை தாக்க பயன்படுத்தப்படும். சா.பொ.1-ஆன அரிவாளால் காயம் விளைவிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று மருத்துவர் கருத்துரைத்துள்ளதால், மருத்துவ சான்று அனைத்து கண்ணுற்ற சாட்சிகளின் கூற்றினையும் முழுமையாக உறுதிப்படுத்துகின்றது எனக் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. எஸ். நாகமுத்து அவர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

6. அடுத்ததாக குற்றம் கொலைக்குற்றமல்ல என்றாலும், அது கொலை குற்றமாகா, மரணம் விளைவிக்கும் குற்றமென வலியுறுத்தப்பட்டது. இந்த வழக்கு இ.த.ச., பிரிவு 300-க்குரிய விதிவிலக்கு 4-க்குள் வரக்கூடியது என வலியுறுத்தப்பட்டுள்ளது, இது பின்வருமாறு எடுத்தியம்பப்படுகிறது:

> "விதிவிலக்கு 4 - மரணம் விளைவிக்கும் குற்றமானது, தகாதமுறையில் தமக்கு அனுகூலம் தேடிக்கொள்ளும்வகையில் இல்லாமலோ அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமானமுறையில் நடந்துகொள்ளாமலோ, திடீர்த் தகராறில் உண்டான உணர்ச்சிவேகத்தில் ஏற்பட்ட திடீர்ச் சண்டையில் மரணம் விளைவிக்கும் குற்றம் முன் ஆலோசனையின்றிச் செய்யப்பட்டால், அது கொலைக் குற்றமாகாது."

7. எதிரிகள் இந்த விதிவிலக்கின் பலனைப் பெறமுடியாது என்பது எங்கள் கருத்து. எதிரிகள் அனைவரும் ஆயுதம் வைத்திருந்தனர் என்பதற்கு ஆதாரம் உள்ளது. இருவர் அரிவாளையும், ஒருவர் இரும்புக் குழாயினையும், மற்றொருவர் மரக்கழிகளையும் கையில் வைத்திருந்தனர். கொல்லும் நோக்கத்துடன் வந்திருக்க மாட்டார்கள் என்று அனுமானித்துக்கொண்டாலும், அவர்கள் ஆயுதத்தை கையில் வைத்திருந்தார்கள் என்பது திடீரென ஏற்பட்ட சண்டையில், உணர்ச்சி வேகத்தில்,

அச்சம்பவம் நிகழவில்லை என்பதை தெளிவாகவே சுட்டிக்காட்டுகிறது. மேலே சுட்டிக்காட்டப்பட்டபடி, இரு தரப்பினரும் ஒரு பிரச்சினைக்கு தீர்வுகாண பஞ்சாயத்தில் கலந்துகொள்ள வந்திருந்தனர். ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண்பதுதான் நோக்கமாக இருந்தால், ஆயுதங்களை எடுத்துச்செல்லவேண்டிய அவசியம் என்ன? அதாவது விதிவிலக்கு-4 பொருந்தாது என்று நாங்கள் கருதுகிறோம், ஏனென்றால் வலது பக்க தலையின் நடுவில் அடி கொடுக்கப்பட்டவிதம், இந்த வழக்கை முற்றிலும் இ.த.ச., பிரிவு 300-இன் "நான்காவது" என்ற கூறுக்குள் கொண்டுவருகிறது, இது பின்வருமாறு எடுத்தியம்பப்பட்டுள்ளது:

> " 300. **கொலை** - xxx xxx xxx
>
> இரண்டாவதாக - xxx xxx xxx
>
> மூன்றாவதாக - xxx xxx xxx
>
> நான்காவதாக - அந்தச் செய்கையைச் செய்கின்றவர், அது பெரும்பாலும் உறுதியாக நிகழ்தற்குரிய மரணத்தையோ அல்லது மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடற்காயத்தையோ விளைவிக்கவே செய்யும் என்னும் அளவுக்கு உடனடி அபாயகரமானது என்பதை அறிந்து, மரணத்தையோ மேற்சொன்னவாறான அத்தகைய காயத்தையோ விளைவிக்கும் ஆபத்தை மேற்கொள்வதற்கு யாதொரு காரணமும் இல்லாமல் அத்தகைய செய்கையைச் செய்வாரானால்."

8. எ.1, இறந்தவரின் தலையில் அரிவாளால் ஓங்கி தாக்குவது, மண்டை ஓட்டில் எலும்பு முறிவை ஏற்படுத்தும் ஓர் ஆபத்தான செயல் என்பதையும், தான் செய்யும் அச்செயல் உடனடியாக மரணத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதையும் நன்கு

அறிந்தவராவார். ஆகவே, குரு என்கிற குருபரனின் (எ.1) குற்றத்தீர்ப்பு அல்லது தண்டனைத்தீர்ப்பை மாற்றுவதற்கான எந்தக் காரணத்தையும் நாங்கள் காணவில்லை.

9. இருப்பினும், துரை என்கிற துரைராஜன் (எ.2)-ஐ பொறுத்தவரை, இ.த.ச.-இன் 34-ஆவது பிரிவோ அல்லது 149-ஆவது பிரிவோ பொருந்தத்தக்கதல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால், ஒவ்வொரு எதிரியும் தத்தமது செயல்களுக்கும், காயங்களுக்குமே பொறுப்பாவர். இதன்பொருட்டு, **ஆத்மராம் ஜிங்காராஜ் -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு**[1] என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புரை குறிப்பீடு செய்யப்பட்டது. மாநில அரசால் மேல்முறையிடப்படவில்லை. 2-ஆம் எதிரியைப் பொறுத்தவரை, அவர், இறந்தவரின் பின்புற கழுத்தில் இரும்புக் குழாயால் அடித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இது காயம் எண்கள் 2 மற்றும் 3-ஐ விளைவித்தது. அவை சாதாரணமான சிராய்ப்பு காயங்களே, மேலும் அவை மரணத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது. ஆகவே, எதிரி, இ.த.ச., பிரிவு 324-இன் கீழான குற்றத்தைப் புரிந்ததாகவே தீர்மானிக்கப்படமுடியும். அவர், ஏற்கெனவே சுமார் 11 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துள்ளதால், இ.த.ச., பிரிவு 302-இன் கீழான அவரது தண்டனைத்தீர்ப்பு இ.த.ச., பிரிவு 324-இன் கீழ் மாற்றப்பட்டு, தண்டனையானது ஏற்கெனவே சிறைவாசம் அனுபவித்த காலத்திற்கு குறைக்கப்படுகிறது. வெற்றி என்கிற வெற்றிவேல் (எ.3), நாராயணன் (எ.5) மற்றும் சீனிவாசன் (எ.9) ஆகியோரைப் பொறுத்தவரை, அவர்கள் ஒவ்வொருவரும், அவர்கள் புரிந்த குற்றத்திற்கான குற்றவாளிகள் எனத் தீர்மானிக்கப்படுவதால் உயர் நீதிமன்ற தீர்ப்புரையில் தலையிட எந்தக் காரணமும் நாங்கள் காணவில்லை.

---

1. (1997) 7 எஸ்.சி.சி. 41

10. மேற்கூறியவற்றைக் கருத்திற்கொண்டு *1, 3, 5, 9* ஆகிய எதிரிகளின் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, *2*-ஆம் எதிரியின் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. மேலும், அவருடைய தண்டனைத்தீர்ப்பு இ.த.ச., பிரிவு *302*-இன் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்திலிருந்து, இ.த.ச., பிரிவு *324*-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்கு மாற்றப்படுகிறது மற்றும் தண்டனை ஏற்கெனவே அனுபவித்த சிறைவாச காலத்திற்கு குறைக்கப்படுகிறது.

11. 8.1.2018-ஆம் தேதியிடப்பட்ட இந்த நீதிமன்றத்தின் உத்தரவின் மூலம் *1* மற்றும் *2*-ஆம் எதிரிகள்-மேல்முறையீட்டாளர்களுக்கு பிணை வழங்கப்பட்டன. மேற்கண்டவற்றைக் கருத்திற்கொண்டு, *1*-ஆம் மேல்முறையீட்டாளரின் *(எ.1)* பிணைமுறி இரத்து செய்யப்படுகிறது. அவர் தண்டனையின் மீதமுள்ள காலத்தை அனுபவிப்பதற்காக உடனடியாக காவலிலெடுக்கப்படுதல்வேண்டும் மற்றும் *2*-ஆம் மேல்முறையீட்டாளரின் பிணைமுறி நீக்கப்படுகிறது. விண்ணப்பம்(கள்) ஏதேனும் நிலுவையிலிருப்பின், அது/அவை முடிக்கப்படுதல்வேண்டும்.

மாண்புமிகு நீதியரசர் திரு. தீபக் குப்தா

மாண்புமிகு நீதியரசர் திரு. அனிருத்தா போஸ்

புது தில்லி,

27.09.2019.

.....

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."